பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 10 2023 **TUESDAY** 12 40 **PM**

வணக்கம் - ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, சத்திஷ்கர் மற்றும் தெலங்கானா மாநிலங்களில் பல்வேறு அரசு நலத்திட்டப் பணிகளை இன்று தொடங்கி வைக்கிறார்.

2. சந்திரயான்-3ன் வெற்றி, நாட்டிற்கு பெருமை அளித்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3. இந்திய தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார் தலைமையிலான குழுவினர் தெலங்கானாவில் தேர்தல் முன்னேற்பாட்டுப் பணிகளை இன்று ஆய்வு செய்கின்றனர்.

4. போதைப் பொருள் மற்றும் கள்ளச்சாராயத்தை முழுமையாக ஒழிக்க மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா 13 தங்கம், 24 வெள்ளி, 24 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் தொடர்ந்து 4வது இடத்தில் நீடிக்கிறது.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, சத்திஷ்கர் மற்றும் தெலங்கானா மாநிலங்களுக்கு இன்று செல்கிறார்.

முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தும், பல்வேறு திட்டங்களுக்கான புதிய பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

சத்திஷ்கர் மாநிலத்தில் உள்ள பஸ்தர் மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய கனிம வளர்ச்சி கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள தேசிய எஃகு ஆலையை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

இந்த ஆலையானது, 24 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலையில் உயர்தரமான எஃகு பொருட்கள் தயாரிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

ஜெக்தல்பூர் ரயில் நிலையத்தை தரம் உயர்த்துவதற்கான பணிகளுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

**Antagarh - Taroki** இடையேயான புதிய ரயில் பாதையை அவர் தொடங்கி வைக்கிறார்.

**Jagdalpur - Dantewada** இடையிலான இரட்டை வழி ரயில் பாதையையும் பிரதமர் திறந்து வைக்கிறார்.

பின்னர், தெலங்கானா செல்லும் திரு. நரேந்திரமோடி, மனோகராபாத் மற்றும் **Siddipet** இடையிலான புதிய ரயில்பாதையையும், **Dharmabad – Manoharabad** மற்றும் **Mahabubnagar - Kurnool** இடையிலான மின்மியமாக்கப்பட்ட ரயில் சேவையையும் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

நிஜாமாபாதில் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

ராமகுண்டத்தில் அமைந்துள்ள 800 மெகாவாட் திறன்கொண்ட மின்உற்பத்தி நிலையத்தை பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

**>>>>><<<<<**

நிலவிற்கு சந்திரயான்-3 வெற்றிகரமாக அனுப்பப்பட்டது, நாட்டிற்கு பெருமை அளித்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ள அவர், பள்ளி ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவர்களிடையே பேசியபோது, தமிழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சந்திரயான் விண்வெளி ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளதை குறிப்பிட்டார்.

இந்த வெற்றி, மாணவர்களிடம் ஊக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், வருங்காலத்தில் இந்தியாவின் வளர்ச்சியில் மாணவர்கள் பங்கேற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக, பீளமேடு பகுதியில் பல்வேறு வங்கிகளின் சார்பில் நடத்தப்பட்ட தூய்மை இந்தியா நிகழ்ச்சியிலும் அமைச்சர் கலந்து கொண்டார்.

பின்னர் கொடிசியா வளாகத்தில் நடைபெற்ற வங்கிக் கடன் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, திருமதி. நிர்மலா சீதாராமன், 3 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக் கடன் உதவிகளை வழங்கிப் பேசினார்.

(சவுண்ட் பைட் – நிர்மலா சீதாராமன் 43 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

இந்திய தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார் தலைமையிலான மத்திய தேர்தல் குழுவினர் இன்று தெலங்கானா செல்கின்றனர்.

மூன்று நாட்கள் தங்கியிருக்கும் அவர்கள், தேர்தல் தொடர்பான முன்னேற்பாட்டுப் பணிகளை பார்வையிடுகின்றனர்.

தெலங்கானா மாநிலத்தில் இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி பல்வேறு முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து இந்தக் குழுவினர் ஆய்வு செய்கின்றனர்.

இன்று மதியம், அனைத்து அரசியல் கட்சியினருடனும் தேர்தல் குறித்து கலந்தாலோசிக்கவுள்ளனர்.

பின்னர், காவல்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அதிகாரிகளுடன் குழுவினர் ஆலோசனை மேற்கொள்ளவுள்ளனர்.

>>>>><<<<<

மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை மற்றும் வனத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டுள்ள இரண்டு நாள் மாநாடு, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று தொடங்கியது.

இந்த மாநாட்டில் உரையாற்றிய அவர், போதைப் பொருள், கள்ளச்சாராயம் ஆகியவற்றை முழுமையாக ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

போதைப் பொருள் கடத்துபவர்கள் மீது, கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் வலியுறுத்தினார்.

சமூகவலைதளங்களை தொடர்ந்து கண்காணித்து வர வேண்டும் என்றும், பொய்யான செய்திகளை பரப்புவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

குழப்பம் ஏற்படுத்தும் விதத்தில் நடந்து கொள்பவர்களை கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசின் திட்டங்களை சிறப்பான முறையில் மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டார்.

(சவுண்ட் பைட் - முதலமைச்சர் 43 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

தேசிய புலனாய்வு முகமையால் தேடப்பட்டு வந்த, ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதி ஷாநவாஸை தில்லி காவல்துறையினர், ஜெய்தாபூர் என்ற இடத்தில் கைது செய்துள்ளனர்.

தேசிய புலனாய்வு முகமையால் அறிவிக்கப்பட்ட மேலும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஷாநவாஸை பிடித்து தருபவர்களுக்கு 3 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று இந்த முகமை ஏற்கனவே அறிவித்திருந்தது.

இந்த கைது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய தில்லியின் சிறப்பு ஆணையாளர் திரு. எச்.எஸ். தாலிவால், கைது செய்யப்பட்ட ஷாநவாஸிடமிருந்து வெடிபொருள் தயாரிப்பதற்காக பாகிஸ்தானிலிருந்து அனுப்பப்பட்ட முக்கிய ஆவணங்கள் மற்றும் பொருட்களும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட ஷாநவாஸை, காவல்துறையினர் ஏழு நாட்கள் விசாரணை நடத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

**>>>>><<<<<**

அமெரிக்காவில் மேரிலேண்ட் பகுதியில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் சிலை வரும் 14ஆம் தேதி திறக்கப்படவுள்ளது.

19 அடி உயரமுள்ள இந்த சிலைக்கு சமத்துவ சிலை என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை உருவாக்கிய டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் சிலை, 13 ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட **Accokeek** நகரில் நிறுவப்படுகிறது.

இந்த சிலையை பிரபல சிற்பி ராம்சுதார் உருவாக்கியுள்ளார்.

குஜராத்தில் உள்ள சர்தார் வல்லபாய் பட்டேல் சிலையை உருவாக்கிய சிற்பி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**>>>>><<<<<**

சீனாவின் **Hangzhou**-வில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டியில், இந்தியா மேலும் ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

பத்தாவது நாளாக நடைபெறும் இப்போட்டியில், இதுவரை இந்தியா 13 தங்கம், 24 வெள்ளி, 24 வெண்கலம் உட்பட மொத்தம் 61 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் தொடர்ந்து 4வது இடத்தில் நீடிக்கிறது.

இந்தியாவின் **Arjun Singh, Sunil Singh Salam** ஆகிய இருவரும் ஆயிரம் மீட்டர் ஓட்டப் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளனர்.

இப்போட்டியின் கிரிக்கெட் பிரிவில் நேபாள அணிக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 23 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

மகளிர் வில்வித்தைப் போட்டியில், **Jyothi Surekha Vennam** இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

அவர் இந்தியாவின் **Aditi Gopichand Swami-**யை 149-146 என்ற புள்ளிக்கணக்கில் வென்றுள்ளார்.

இந்நிலையில் **Aditi Gopichand Swami** வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் பங்கேற்கிறார்.

ஆண்களுக்கான பிரிவில் **Abhishek Verma** காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

ஹாக்கி மகளிர் பிரிவில் இந்தியா 13-0 என்ற கோல்கணக்கில் ஹாங்காங்கை வென்றது.

பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் பிரிவில் ஹெச்.எஸ். பிரனாயும், மகளிர் பிரிவில் பி.வி. சிந்துவும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

கலப்பு இரட்டையர் ஸ்குவாஷ் போட்டியில், தீபிகா பல்லிக்கல் - ஹரீந்தர் பால் சிங் சாந்து இணை, ஜப்பான் இணையை வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ள வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மகளிர் 3 ஆயிரம் மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெண்கலப்பதக்கம் வென்ற ப்ரீத்தி லம்பாவிற்கு வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

ப்ரீத்தி லம்பாவின் விடா முயற்சியும், உறுதியான செயல்பாடும் ஊக்கமளிக்கக்கூடியதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரத்து 600 மீட்டர் கலப்பு தொடர் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ள முகமது அஜ்மல், வித்யா ராம்ராஜ், ராஜேஷ் ரமேஷ், வெங்கடேசன் சுபா ஆகியோரையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.

>>>>><<<<<